DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

**STC. No. 898/2024**

**Deposition of LW1 examined as PW 1** Dt. 12.08.2025

| | |
|---|---|
| Name | விவேக் |
| Father's/Husband's Name | ஜெயராமன் |
| Village | பருத்திக்குடி |
| Taluk | |
| Age | 28/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 12.08.2025

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். நான் பன்னீர்செல்வம் என்பவரிடமிருந்து அவருடைய மனைவி காந்திமதி நிலத்தை ஒத்திக்கு பெற்று கடந்த மூன்று வருடமாக நான் சாகுபடி செய்து வருகிறேன். மேற்படி 4 ஏக்கர் நிலத்தில் கடந்த 2024 ம் ஆண்டு கத்திரி, மிளகாய், கிழங்கு ஆகியவற்றை சாகுபடி செய்து இருந்தேன். இந்நிலையில் 27.03.2024 அன்று இரவு 09.00 மணியளவில் பூவும், பிஞ்சுமாக இருந்த மேற்படி பயிர் சாகுபடிகளை ஆஜர்எதிரிகள் டிராக்டரை விட்டு உழுது சேதப்படுத்தி விட்டனர். உடனே வயலுக்கு சென்று ஏ ன் சேதப்படுத்தினீர்கள் என்று கேட்டதற்கு எதிரிகள் இருவரும் என்னை குச்சசிகாரி மகனே தேவடியா மகனே என்று திட்டினார்கள். ஜெயக்குமார் என்னை கையால் இடது கண்ணத்தில் அடித்தார். ஆஜர் எதிரிகள் இருவரும் இந்த பக்கம் வந்தால் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தனர். பின்னர் அன்றைய தினம் இரவே பாலையூர் காவல் நிலையம் சென்று எதிரிகள் மீது வாய்மொழியாக புகார் கொடுத்தேன். பின்னர், 29.03.2024 ம் தேதி மீண்டும் எழுத்துபூர்வமாக கொடுத்தேன்எதிரிகள் சேதப்படுத்திய விளைபயிர்களின் மதிப்பு சுமார் ரூ.20,000/- ஆகும். அந்த போகமே எனக்கு நஷ்டம் ஆகிவிட்டது. அந்த பயிர்களை சாகுபடி செய்து விற்பனை செய்திருந்தால் கூடுதல் இலாபம் கிடைத்து இருக்கும். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **அந்த புகார் மனு (அ.சா.ஆ.1) ஆக குறியீடு செய்ப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

**இல்லை**

[signature]

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

[signature] 12/8/25

நீதித்துறை நடுவர் எண்-II

மயிலாடுதுறை